உலகளாவிய ஊழல் தடுப்புக் கொள்கை

உரிமையாளர்:	Anna Diaz, Chief Compliance Officer
மதிப்பாய்வாளர்:	Eva Argilés, General Counsel
அனுமதியளித்தவர்:	இயக்குநர் குழுமம்
தேதி:	நவம்பர் 12, **2021**

பதிப்பு:	*5.0*
மொழி:	தமிழ்
நோக்க எல்லை:	உலகளாவிய

1. கொள்கை அறிக்கை

Applus+ நிறுவனம்:

1. உலகளாவிய அளவில் தொழிலைச் சட்டப்படியும், நன்னெறிப்படியும், தொழில்முறையிலும் செய்யத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது

2. *Applus+* நிறுவனத் தொழில் நிபுணர்கள், கூட்டுமுயற்சியில் ஈடுபடுகிற கூட்டணி நிறுவனங்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் ஆகியோர், இந்தக் கொள்கையைப் புரிந்து கொண்டு, *Applus+* நிறுவனத்தின் சார்பில் தொழிலைச் சட்டப்படியும், நன்னெறிப்படியும், தொழில்முறையிலும் மேற்கொள்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

3. இலஞ்சத்திற்கு எதிராகவும் (வர்த்தக ரீதியிலான இலஞ்சம் உட்பட), கையூட்டுகளுக்கு எதிராகவும், முறையற்ற அல்லது சட்டவிரோதமான முறையில் பணம், பரிசுப்பொருட்கள் அல்லது பிற முறையற்ற ஒருசார்பு சாதகங்களை அரசு அதிகாரிகள், வாடிக்கையாளர்கள், மற்ற நிறுவனங்களின் இயக்குநர்கள், அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் அல்லது வேறு எவரிடமிருந்தும் பெறுவதற்கு எதிராகவும் போராடுவதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

4. இந்நிறுவனம் தொழிலை மேற்கொள்கிற நாடுகளில் உள்ள, உரிய ஊழல்தடுப்புச் சட்டங்களுக்கு இணங்கி நடக்கத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

5. இந்தக் கொள்கை மீறல்களைத் தீவிரமான விஷயமாக எடுத்துக் கொள்ளத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது

6. இக்கொள்கையைத் திறம்பட அமல்படுத்திப் பராமரித்து முன்னெடுத்துச் செல்லத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது.

Applus+ நிறுவனத்தின் சார்பாகச் செயல்படுகின்ற *Applus+* நிறுவனத் தொழில்நிபுணர்கள், கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ள கூட்டணி நிறுவனங்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் அனைவரும் இந்தக் கொள்கைக்கு இணங்கி நடக்க வேண்டியுள்ளது; அதோடு அவர்களை, நியாயமற்ற பலன் அல்லது அனுகூலம் (இலஞ்சங்கள், கையூட்டுகள் அல்லது மற்ற சட்டவிரோத பணம்பெறுதல்கள்) எதையும், *Applus+* தொழிலுக்குத் தொடர்புடைய எந்த வழியிலும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தருவதாகச் சொல்வது, தர வாக்குறுதியளிப்பது, தருவது, தரச் சொல்வது அல்லது ஏற்றுக் கொள்வதைத் தடை செய்கிறோம்; அப்படிச் செய்வது, பெற்றுக்கொள்பவரது கடப்பாடுகளை மீறுவதாகிறது. இக்கொள்கை குறித்த பயிற்சியில் கலந்து கொள்ளும் *Applus+* நிறுவனத் தொழில் நிபுணர்களை தலைமை ஒழுங்கமைப்பு அதிகாரியே நியமிப்பார்.

Applus+ நிறுவனம் இந்தக் கொள்கை மீறல்களைப் பொறுத்துக் கொள்ளாது. இக்கொள்கை மீறல்களை, *Applus+* நிறுவனத்தின் தலைமை ஒழுங்கமைப்பு அதிகாரிக்கு அல்லது பகுதி ஒழுங்கமைப்பு அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

Applus+ நிறுவனம், பழிவாங்குதல் எதுவும் இருக்கக்கூடாது எனும் கொள்கையைப் பின்பற்றுகிறது: *Applus+* நிறுவனத் தொழில் நிபுணர்கள், சந்தேகத்திற்கிடமான கொள்கை மீறல்களை அல்லது அத்துமீறல்களை நன்னம்பிக்கை அடிப்படையில்

அறிவித்ததற்காக அல்லது இக்கொள்கையின் கீழ் ஒத்துழைப்பு நல்கியதற்காக பழிவாங்கும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள்.

தலைமை ஒழுங்கமைப்பு அதிகாரியே இக்கொள்கையின் உரியமையாளராவார்; மற்றும் அவரிடம்தான் இக்கொள்கையை அமல்படுத்துவதற்கும், இணக்கி நடத்துவதற்குமான உச்சக்கட்டப் பொறுப்பு இருக்கிறது. தலைமை ஒழுங்கமைப்பு அதிகாரி *Applus+* நிறுவனத்திற்குள் இக்கொள்கை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பொறுப்பானவராக இருப்பார். உங்களுக்கு இக்கொள்கை குறித்த கேள்விகள் ஏதேனும் இருக்குமானால், தயவுசெய்து *Applus+* நிறுவனத்தின் தலைமை ஒழுங்கமைப்பு அதிகாரி அல்லது பகுதி தலைமை ஒழுங்கமைப்பு அதிகாரியைத் தொடர்பு கொள்ளுங்கள்.